FIRST INFORMATION REPORT TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under Section 173 BNSS" முதல் தகவல் அறிக்கை Inv C 8109480

1. District : மாவட்டம் Ranipet PS: Vigilance & Anti corruption Ranipet காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 5/2025 முத.அ. எண் Date: 05.12.2025 நாள்

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act, 1988 as amended by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: U/s 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 03.12.2025 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12.00 Hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.12.2025 Time : நேரம் 08.30 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 05.12.2025 Time : நேரம் 08.30 Hrs and 09.30 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக – Oral statement

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் – Municipality office, Walajahpet, Ranipet District about 5 kms East
Beat Number : முறைக் காவல் எண் –
(b) Address : முகவரி Municipality office Walajahpet, Ranipet District
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் – District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Gopalakrishnan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Raja
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1990 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
(f) Occupation : தொழில் Daily wages (g) Address : முகவரி No. 14, Thiruvalluvar street, Municipality Quarters, Gandhi park Backside, Walajah, Ranipet District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Delvaraj Accountant, Municipality office, Walajahpet, Ranipet District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R-இளவழகி 5/12/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Vijayalakshmi

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

05.12.2025 @ 12.15 hrs

Name: பெயர் S. Vijayalakshmi,
Rank: நிலை .....No. எண் .....
Inspector of police,
Vigilance & Anti-corruption,
Ranipet

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் 05.12.2025 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, திரு.R.கோபாலகிருஷ்ணன் வயது.35/2025, த/பெ.ராஜா, எண்.14, திருவள்ளுவர் தெரு, நகராட்சி குடியிருப்பு, காந்தி பூங்கா பின்புறம், வாலாஜா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த வாய்மொழியான புகாரை கணினியில் தமிழில் டைப் செய்யப்பட்ட புகார் வாக்குமூலத்தின் விவரம் பின்வருமாறு: திரு.R.கோபாலகிருஷ்ணன் வயது.35/2025, த/பெ.ராஜா, எண்.14, திருவள்ளுவர் தெரு, நகராட்சி குடியிருப்பு, காந்தி பூங்கா பின்புறம், வாலாஜா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவர் வாய்மொழியாக கொடுத்த புகார் வாக்குமூலம் நாள் 05.12.2025 என் பெயர் கோபாலகிருஷ்ணன் நான் 6-ம் வகுப்பு வரை படித்துள்ளேன் எனக்கு தமிழில் எழுத படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் தமிழில் போடுவேன். என் அப்பா பெயர் ராஜா கடந்த 2000 ஆம் ஆண்டு இறந்து விட்டார். அம்மா பெயர் எர்ரம்மாள் வாலாஜா நகராட்சியில் துப்புரவு பணியாளராக கடந்த 32 வருடங்களாக பணிபுரிந்து வருகிறார். என்னுடன் பிறந்தவர்கள் அண்ணன்கள் விஸ்வநாதன், புருஷோத்தமன் தங்கை தனலட்சுமி. மூன்று பேருக்கும் திருமணமாகி தனித்தனியாக வசித்து வருகின்றனர். நான் என் அம்மாவுடன் வாலாஜா நகராட்சி குடியிருப்பில் இருக்கிறேன் எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. நான் வாலாஜா பஸ் ஸ்டேன்டில் இருக்கும் கட்டண கழிப்பிடத்தில் பணம் வசூல் செய்யும் வேலை செய்கிறேன். எனக்கு தினக்கூலி ஒரு நாளைக்கு ரூ.400/-. என் அம்மா வாலாஜா நகராட்சியில் கடந்த 32 வருடங்களாக துப்புரவு பணியாளராக வேலை செய்து வருகிறார். அவருக்கு இன்கிரிமெண்ட் அரியர் பணம் வர வேண்டியுள்ளதால் 28.11.2025 அன்று காலை என்னுடைய அம்மா வாலாஜா நகராட்சி கமிஷ்னரை பார்த்து லெட்டர் ஒன்றை கொடுக்க நேரில் போனபோது கமிஷ்னர் மீட்டிங்கில் இருந்ததால் ஒ.ஏ அதை வாங்கி கொண்டு சீல் போட்டு கமிஷ்னர் டேபிளில் வைத்து விட்டதாக சொன்னார். பின்னர் நானும் என்னுடைய அம்மாவும் 01.12.2025 அன்று காலை கமிஷ்னரை பார்க்க போனபோது ஒ.ஏ நாங்கள் வந்ததை கமிஷ்னரிடம் சொன்னார். அதற்கு கமிஷ்னர்

அவர்கள் தேவராஜ் அக்கவுண்டன்ட்டை பார்க்க சொல்லி சொன்னார். நானும், என்னுடைய அம்மாவும் தேவராஜ் அக்கவுண்டன்ட்டை பார்க்க போனோம். அங்கு என் அம்மா அவரிடம் என்னுடன் கூட வேலை செய்யுற எல்லாருக்கும் இன்கிரிமெண்ட் அரியர் கொடுத்து விட்டீர்கள் ஆனால் எனக்கு மட்டும் இன்னும் கொடுக்கல என்று கொஞ்சம் சத்தம் போட்டு பேசியதற்கு, மொதல்ல வெளியில போ ஆப்பீஸ்ல் சத்தம் போடாதே உன்னோட SRலையே இன்னும் சைன் ஆகல என்று சொல்லிவிட்டு என்னை பார்த்து உங்க அம்மாவ கூட்டிட்டு போ அப்புறம் எனக்கு நீ போன் பண்ணு என்று என்னிடம் சொல்லி எங்களை அனுப்பி விட்டார். நான் தேவராஜிக்கு என்னுடைய செல்போன் நெம்பர்.6379301580-லிருந்து அவருடைய செல்போன் நெம்பர்.8610306280-ற்கு போன் செய்து ஏன் என் அம்மாவிடம் சத்தம் போட்டீர்கள் என்று கேட்டதற்கு எல்லார் எதிரிலேயும் பைத்தியம் போல கத்தியதால் நான் வெளியில் போ என்று சொன்னேன், நான் அப்புறம் போன் பன்னுறேன் என்று சொல்லி வைத்துவிட்டார். அதன்பிறகு 02.12.2025 அன்று இரண்டு மூன்று முறை போன் செய்தேன். அப்போதெல்லாம் அவர் நானே போன் செய்யுறேன் என்று சொல்லி வைத்துவிட்டார். சாயந்திரம் சுமார் 6.00 மணிக்கு நான் போன் செய்தபோது, அவர் V.C.மோட்டூரில் உள்ள சித்ரா காபி பார் வா, நான் ஆபீஸில் இருந்து கிளம்பும் போது போன் செய்கிறேன் என்று சொன்னார் ஆனால் அவர் எனக்கு போன் செய்யவில்லை. நான் முந்தாநாள் 03.12.2025 அன்று காலை சுமார் 10.45 மணிக்கு போன் செய்த போது அவர் ஆபீஸ்க்கு வா ஆபீஸில் யாரும் இல்லை என்று சொன்னார், அதன்பிறகு நான் சுமார் 12.00 மணிக்கு வாலாஜா நகராட்சி ஆபீஸ்க்கு போய் அவரை பார்த்து ஏன் சார் நேத்து போன் பண்ணல என கேட்டதற்கு மழையா இருந்தது நான் வீட்டிற்கு போய்ட்டேன் என்று சொன்னார். பின்னர் என்னுடைய அம்மாவுக்கு அரியர் பணம் எவ்வளவு வரவேண்டியுள்ளது என்று கேட்டபோது அவர் ரூ.2,14,000/- வரனும். அதில் ரூ.50,000/- மட்டும் தற்போது போடுறேன். அதுகூட தேவராஜ் மனசு வச்சாதான் என்று சொன்னார். சார் எப்படியாவது சீக்கிரம் ஏற்பாடு பண்ணி கொடுங்கள் சபரி மலைக்கு போக வேண்டும், செலவு இருக்கு என்று சொன்னதற்கு அவர் கையில் 5 விரல்களை காண்பித்து கொடு என்றார், அதற்கு நான் ஐந்தாயிரமா நான் எப்படி

கொடுப்பேன் என்று சொன்னதற்கு அவர் என்னை பார்த்து எதையாவது வெச்சி கெர்டு என்று சொன்னார். பணம் ரூ.5,000/- எடுத்து கொண்டு வந்து என்னை பார் நான் வேலையை முடித்து கொடுக்கிறேன். உங்க அம்மா அக்கவுண்ட்டில் பணம் வந்துவிடும். எனக்கு பணம் கொடுக்காமல் ஒன்றும் செய்ய முடியாது என்று திட்டவட்டமாக சொல்லி அனுப்பிவிட்டார். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. என்னுடைய அம்மாவுக்கு வரவேண்டிய நிலுவை தொகைக்கு ரூ.5,000/-ம் லஞ்சம் கொடுத்து வாங்க எனக்கும் என்னுடைய அம்மாவுக்கும் விருப்பம் இல்லை. அதனால் லஞ்சமாக ரூ.5,000/-ம் கேட்கும் திரு.தேவராஜ் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுத்து என்னுடைய அம்மாவுக்கு கிடைக்க வேண்டிய சம்பள நிலுவை தொகையை கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய புகாரினை வாய்மொழியாக நான் தெரிவிக்க இராணிப்பேட்டை லஞ்ச ஒழிப்பு காவல் ஆய்வாளராகிய நீங்கள் அதனை கம்பியூட்டரில் வாக்குமூலமாக டைப் செய்தீர்கள். படிக்க கேட்டேன் நான் சொன்னபடி சரியாக இருந்தது. (SD/-XXXXXX) P.கோபாலகிருஷ்ணன் 5/12/25.

Sir,

The oral statement given by Tr.R.Gopalakrishnan was recorded by me on 05.12.2025 at 08.30 hrs at the O/o the DSP, V&AC, Ranipet. Sd/- xxxxxx (S.Vijayalakshmi) 05/12/25 Ins. of Police V&AC, Ranipet.

Sir,

After due verification, after verifying the antecedents of the accused and credibility of the complainant after due satisfaction today on 05.12.2025 at 09.30 hrs I have registered a case in Ranipet V&AC Cr.No.5/2025 U/s 7(a) of P.C. Act 1988 as amended in Prevention of Corruption (Amendment) Act 2018. Sd/- xxxxxx (S.Vijayalakshmi) 5/12/25 Inspector of Police Vigilance & Anti-Corruption, Ranipet.

The FIR in original along with the statement of the complainant sent to the Hon'ble Principal District & Sessions Judge / Special Judge, Ranipet and other copies to the officers concerned.

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Ranipet.